Registered as a Newspaper

நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
"ஷப்ரு"
207,மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
207, Power House Road,
JAFFNA.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ கார்த்திகை மீ 14 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ற.ஆகிர் பிறை 18 ( 29 - 11 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 3

வடக்கு-கிழக்கு

# முதலமைச்சராக வரதராஜப்பெருமாள்

## டிச: 5 முதல் மாகாணசபை இயங்கும்; தலைநகராக திருகோணமலை

கொழும்பு, நவம்பர் 29

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சராக திரு. அண்ணாமலை வரதராஜப்பெருமாள் நியமிக்கப்பட்டார்.

ஈ. பி. ஆர். எல் எப். இயக்க தலைமைச் செயலாளர் திரு. கே. பத்மநாபா நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது.

அச்செய்தி அறிக்கையின்படி 5 உறுப்பினர்கள்கொண்ட அமைச்சரவையில், மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினரான திரு. கிருபாகரன் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

திருமலை மாவட்டத்தில் இருந்து தெரிவான ஈ. பி. ஆர். எல். எப். சிங்கள உறுப்பினரான திரு. தயான்ஜெயதிலகாவும் ஓர் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஈ. என். டி. எல். எப். இயக்கத்தில் இருந்து ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் அமைச்சர்களாக நியமிக்கப்படுவர்.

இப்படி இந்திய வானொலிச் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தலைநகரயாக திருகோணமலை இருக்கும்.

வருகிற 5-ஆம் திகதியில் இருந்து மாகாண சபை இயங்கத் தொடங்கும்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையை ரத்துச் செய்வதற்கு நாம் ஆதரவில்லை; அதற்குப் பதில் உடன்படிக்கையை பலப்படுத்தவே நாம் பாடுபடுகிறோம்.

இப்படி முதலமைச்சராகநியமிக்கப்பட்டுள்ள திரு. வரதராஜப்பெரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹபரணையிலுள்ள மற்றொரு மின்கோபுரமும் சேதம்!

### அனுராதபுரம் முழு இருளில்

யாழ்ப்பாணம், நவ.29

அனுராதபுரம் மாவட்டத்துக்கு தற்காலிகமாகமின்சார விநியோகம் மேற்கொண்டுவந்த 32 கிலோவோல்ட் கொண்ட மின்கோபுரமும் நாசகார சக்திகளினால் சேதமாக்கப்பட்டது.

இதன் காரணமாக அனுராதபுர மாவட்டம் முழுதும் இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த 23ஆம் திகதி புதன்கிழமை ஹபரணைக்கும் களத்தாவைக்கும் இடையில் இருந்த 132 கிலோவோல்ட்கொண்ட மின்கோபுரம் சேதமாக்கப்பட்டது.

இதனால் வடமத்திய மாகாணத்தின் பெரும் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

அன்று தொடக்கம் ஹபரணையில் இருந்த 32 கிலோ வோல்ட் கொண்ட மின்கோபுரத்தின் ஊடாக அனுராதபுரம் மாவட்டத்துக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீர் விநியோகம் பாதிப்பு இல்லை

யாழ்ப்பாணம், நவ 29

திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய பகுதிகளில்உள்ள யாழ் மாநகர நீர் விநியோகப் பகுதிகளுக்கும் யாழ் போதனா வைத்தியசாலைக்கும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

மின்தடை காரணமாக நீர் விநியோகம் பாதிக்கப்பட மாட்டாது என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-5)

## ரயில் சேவை தடைப்பட்டது

கொழும்பு, நவ,29

குருநாகலுக்கு அப்பால் உள்ள ரயில்பாதைகளில் பிஷ்பிளேட் அகற்றப்பட்டிருப்பதால் ரயில் சேவை நடைபெறவில்லை என்று அறிவிக்பட்டது.

கல்கமுவ ரயில்பாதையிலும் பிஷ்பிளேட்டுக்கள் அகற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## பாகிஸ்தான் புதிய பிரதமர் யார்?

பாகிஸ்தானின் பிரதமர் யார் என்பதை பதில் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் வருகிற வியாழக்கிழமை அறிவிப்பார்.

நாட்டுமக்களுக்கு அன்றையதினம் பதில் ஜனாதிபதி தொலைக்காட்சி, வானொலிமூலம் உரை நிகழ்த்தவிருக்கிறார்.

அப்போது புதிய பிர

(6ஆம் பக்கம் பார்க்க)

## மூச்சந்தி முரளி



எரிபொருளுக்காக அலைந்து உள்ள எரிபொருளையும் இழந்த வாகனங்கள் பாடு கஷ்டம் தான் பாருங்கோ!

## எரிபொருள் நிரப்ப நகரில் நீண்ட வாகன 'கியூ'

யாழ்ப்பாணம், நவ.29

நேற்று யாழ். நகரில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக நூற்றுக்கணக்கான வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாக காத்து நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த சனிக்கிழமை எரிபொருள்களை ஏற்றிக் கொண்டு ரயில் ஒன்று யாழ்ப்பாணம் வந்தது.

இங்கு கொண்டுவரப்பட்ட எரிபொருள் ஒரு சில தினங்களுக்கே போதுமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஒ - 5)

## ஆசிரியருக்கான சம்பளம் நேற்று வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ 29

யாழ், மாவட்ட ஆசிரியர்களுக்கான சம்பளம் நேற்று வழங்கப்பட்டது.

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் கொழும்புக்குச் சென்று சம்பள நிதியைப் பெற்று வந்ததை அடுத்து நேற்று பெரும்பாலான பாடசாலைகளுக்கு சம்பள விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

சம்பளக் காசோலைகளை பெற்றுக் கொள்ளாத பாடசாலைகள் உடனடியாக யாழ் கல்வித் திணைக்களத்தில் காசோலைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-9)

# யாழ். மின்சார விநியோகம்: இன்று முதல் புதிய அட்டவணை

யாழ்ப்பாணம், நவ 29

இன்று 29ஆம் திகதி தொடக்கம் சுன்னாகத்திலுள்ள ஜெனரேட்டர்கள் மூலம் பகுதி பகுதியாக மின்சாரம் வழங்குவதற்கான புதிய நேர அட்டவணையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

காலை 7 மணி முதல் 8மணி வரை பருத்தித்துறை.

8 மணி முதல் 9 மணி வரைவட்டுக்கோட்டை.

9 மணிமுதல் 10 மணி வரை சாவகச்சேரி.

10 மணிமுதல் 12மணி வரை யாழ்ப்பாணம்

12 மணி முதல் 12 30 மணிவரை காங்கேசன் துறை.

12 30 மணி முதல் ஒரு மணிவரை ஆனைக்கோட்டை,மானிப்பாய்.

ஒரு மணிமுதல் 1-45 மணி வரை யாழ்ப்பாணம்.

1 45 மணிமுதல் 2-15 மணி வரை காங்கேசன் துறை

இந்த நேர அட்டவணை டிசம்பர் மாதம் 8 ஆம் திகதிவரை அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க மின்சார விநியோகத்தில் ஈடுபடும் உள்ளூராட்சி அமைப்புக்களை தமது

(6ஆம் பக்கம் பார்க்க)

## தென் இலங்கையில் மனித உரிமைகள் மீறல்

### பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 28

தென் இலங்கையில் அரசுப்படைகள் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கொழும்பு பிரஜைகள் குழுகுற்றஞ் சாட்டியிருப்பதாக பி.பி.சி.வானொலி நேற்று இரவு அறிவித்தது.

அண்மையில் புதிதாகச் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்திஇம்மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக இக் குழு மேலும் தெரிவித்தது.

புதிய சட்ட விதிகளின் கீழ் கொல்லப்படும் நபர்களின் சடலங்களை மரண விசாரணை இன்றி புதைக்கும் உரிமையை பாதுகாப்புப்படையினர் பெற்றுள்ளனர்.

இந்த விதிகள் அமுலுக்கு வந்ததன்பின்னர்100க்கு மேற்பட்டோர் துப்பாக்கி மனிதர்களினால் கொல்லப்பட்டுள்ளனர்; மரணவிசாரணை இன்றி அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டு உள்ளன என்று பிரஜைகள் குழு தெரிவித்திருப்பதாகவும் பி.பி.சி. வானொலி தெரிவித்தது.

கொல்லப்பட்ட பொதுமக்களின் பெயர்ப்பட்டியலை பிரஜைகள் குழு நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டது.

தென் மாகாணத்தில் பரவலாக இடம்பெற்று வரும் கொலைகள், கைதாகுபவர்களின் சடலங்கள் பின்னர் வீதிகளில் வீசப்படுவது ஆகியன குறித்தும் குழு கவலை தெரிவித்திருப்பதாகவும் பி.பி.சி. தெரிவித்தது.

(இ-எ)

கொழும்பு மாநகருக்கு வெளியே

## படையினர் நேற்று வீடு வீடாகத் தேடுதல்

### 400தீவிரவாதிகள்கைதாகினர்

கொழும்பு, நவ 29

கொழும்பு மாநகருக்கு வெளியே உள்ள பிரதேசங்களில் பாதுகாப்புப் படையினர் வீடு வீடாக நேற்று சோதனை நடத்தினர்.

அப்போது 48 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது.

தேடுதலின் போது 400 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் 100 பேர் முக்கிய சந்தேகநபர்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தேடுதலின் போது பெருந்தொகையான வெடி குண்டுகள், கத்திகள் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## தீக்காயம்

குருநகர் நவ 29

யாழ்.ஒட்டுமடம் சந்தியில் ஞாயிறு மாலை ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் காயமடைந்தனர்.

சந்தியில் எரிபொருள் விற்பனை செய்யும் தனியார் கடை ஒன்றில் கொளுத்தி வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்தி சரிந்து விழுந்ததே தீ விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

# காட்டுக்குச் சென்ற ஐவர் கண்ணியில் சிக்கி மரணம்

### வட்டக்கச்சியில் சம்பவம்

வட்டக்கச்சி, நவ. 29

மாட்டு வண்டியில் காட்டுக்குத் தொழில் நிமித்தமாகச் சென்றுகொண்டிருந்த ஐந்து பேர் கண்ணிவெடிக்கு இலக்காகி மரணமானார்கள்.

வட்டக்கச்சிக்குச் சமீபமாகவுள்ள புதுக்காடு என்னும் கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம்பற்றி அறிய வருவதாவது:-

பிரஸ்தாப ஐவரும் வழமையாகக் காட்டுக்குத் தொழிலுக்காகச் செல்பவர்கள் என்றும்—

அன்றும்வழமைபோல் இவர்கள் வண்டியில் சென்றுகொண்டிருந்த போது காட்டுப்பாதையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடித்தது என்றும் தெரியவருகிறது.

இறந்தவர்களின் விவரம் வருமாறு:.

சி. பிறேம்குமார் (வயது 22), இ. புவீந்திரன் (வயது 20). கோ. மோகன் (வயது 20), சு. உதயகுமார் (வயது 26) இவர் இருபிள்ளைகளின் தந்தை, பொ. விமலச்சந்திரன் (வயது 34) இவர் நான்குபிள்ளைகளின் தந்தை. (ஒ-ரி)

## காரைநகரில் இருவர் கொலை

காரைநகர், நவ,29

காரைநகர் பலிகாட்டில் கடந்த சனிக்கிழமை வயோதிப பெண்மணி ஒருவரும் மணற்காட்டு அம்மன் கோவிலடியில் இளைஞர் ஒருவரும்இனந்தெரியாத சிலரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஒ-73)

## நேற்றைய கொலைகள் - 5

கொழும்பு, நவ. 29

கனேகொட என்னும் இடத்தில் ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒரு ஆண் கத்தியால் குத்திக்கொல்லப்பட்டார்.

உனுசம்வெஹர என்னும் இடத்தில் ஒருமீனவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவங்கள்நேற்று இடம்பெற்றன. (ஒ-எ)

## தாதிப் பயிற்சி போதனாசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம் நவ, 29

யாழ்.தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்குஒப்பந்த அடிப்படையில் போதனாசிரியர் ஒருவரை யாழ். சுகாதார திணைக்களம் நியமித்துள்ளது.

யாழ்.நகரில் உள்ள "ஹோலி குரொஸ்" வைத்திய சாலையில் கடமையாற்றி வரும் கன்னியாஸ்திரி ஒருவரே இவ்வாறு தாதிகள் பயிற்சிப் போதனாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தாதிகளுக்கான டிப்புளோமா பட்டம் பெற்ற இவர் வாரத்தில் 3 நாட்கள் போதனாசிரியராகக் கடமையாற்றுவார். (ஒ-9)

## ஈராக் ஜனாதிபதி ஹுசேன் எகிப்துக்கு திடீர் விஜயம்

செய்ரோ, நவ 28

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று திடீரெனஎகிப்துக்குவிஜயம் செய்தார்.

ஈராக்கின் உப ஜனாதிபதியை எதிர்பார்த்து எகிப்து வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் கெய்ரோ விமானநிலையத்தில் நின்றனர்.

ஆனால் விமானத்தில் இருந்து ஜனாதிபதி சதாம் ஹுசேன் இறங்குவதைக் கண்டு எகிப்து அதிகாரிகள் திகைத்துப் போனார்கள். (ஒ-எ)

## தனங்கிளப்பு ஊடாக போக்குவரத்து

யாழ்ப்பாணம், நவ 29

கைதடி முதல் சாவகச்சேரியின் ஒரு பகுதிவரையான பகுதிகளில் நேற்றுக்காலை உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ் பல்கலைக்கழகத்தின்

# பொறியியல்பீட நிர்மாண வேலைகள்

## அடுத்த ஆண்டு ஆரம்பமாகும்

### 40 கோடியே 75 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பீடு

யாழ்ப்பாணம், நவ 29

யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அமைப்பதற்கு கிளிநொச்சியிலுள்ள முருகண்டி, அக்கராயன் குளம் வீதியில் நூறு ஏக்கர் விஸ்திரணம் கொண்ட காணி பெறப்பட்டிருக்கிறது. நிர்மாண வேலைகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சகல நவீன வசதிகளுடன் கூடிய இந்த பொறியியல் பீடத்தை அமைப்பதற்கு நாற்பது கோடியே எழுபத்தைந்து லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கட்டட நிர்மாண வேலைகளை முற்றுகப் பூர்த்தி செய்வதற்கு நான்கு வருடகாலம் தேவைப்படும்

புதிய பொறியியல் பீடத்துக்கு 1990-ஆம் ஆண்டு முதல் மாணவர்களை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தின் உயரதிகாரிகளைக் கொண்ட விசேஷ குழு ஒன்று கடந்த மாதம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பொறியியல் பீடத்துக்கான நூறு ஏக்கர் காணியைத் தெரிவு செய்தது

இதேவேளையில் புதிய பொறியியல் பீடம் சம்பந்தமாக திட்ட அறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

29 - 11 - 1988
கார்த்திகை 14
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:- 10-44 முதல்12-14வரை
ராகுகாலம்:- 3-14 முதல் 04-44வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டையிடும் பருவத்தில் உள்ள சிவப்பு நிறக் கோழிகள். Pure அல்சேஷன் பெண் நாய் ஒரு வயது. உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 47, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (7941)

## தளபாடம் விற்பனைக்கு

கடைத் தேவைக்கு ஏற்ற விறுக்கைகளும் இரு அலுமாரிகளும் மலிவு விலையில் கொடுக்கப்படும். இடம்:- பேள் உலோகத் தொழிற்சாலை, 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7944)

## மலிவு விற்பனை

அலுமினியத் தொழிற்சாலையில் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மலிவு விலையில் விற்கப்படும். காலம்: 28-11-88 தொடக்கம்: 30-11-88 வரை. இடம்:- பேள் உலோகத் தொழிற்சாலை, 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (7943)

## தேவை

சிங்கப்பூரில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்ய ஒரு பணிப் பெண் உடனடியாகத் தேவை. பிரயாணம் விரைவில். 2 00 மணிக்குப்பின் வரவும். த. துரைசிங்கம், 376B, நாவலர் வீதி, ஸ்ரான்லி கல்லூரி முன், யாழ்ப்பாணம். (7949)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/357)

## Spoken English

புதிய பிரிவு ஆரம்பம் 29-11-88. செவ்வாய், வியாழன் நாட்களில் நேரம் 2 30 முதல் 4 மணி வரை S. B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (7831)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். 'ஷப்ரு சேவைப் பிரிவு, இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

## ரேனியோ

தரமான ரேனியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம். ''ஷப்ரு'' சேவைப் பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/698)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### தேவதாஸ் ஐஸ்ரின் லிபேரியஸ்

பிறப்பு: 23 - 06 - 1971 — இறப்பு: 30 - 10 - 1988

காளை வயது வருமுன் கட்டழகுத் தோற்றமும் நாளை நிலை அறிய நன்மழலை உள்ளமும் பாலைச் சிரிப்பும் பண்பான வார்த்தைகளும் வேளை வரும்முன் வீணாக அழிந்தார்.

உன்னை என்றும் எங்களால் மறக்க முடியாது.

உனது பிரிவால் துயருறும்

குடும்பத்தினர்.

28, மகேந்திரபுரம், பாஷையூர். (7842)

# London Exams

C.I.M.A. I.D.P.M.
A.A.T. I.A.B.

**Computer - Basic**
**Hotel Management**

**ஆரம்பம்: 3-12-88 முதல்**

ARULANDA
BERTRAM
JAYARATNAM
KAILASAPILLAI
NAVARENDRAN
PUSPHA
SIVAPATHASUNDARAM
THAVARATNASINGAM
VIVEKANADARAJAH

JOIN THE LEADERS

பழைய மாணவர்களுக்கு விசேஷ சலுகை

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(O.LR. தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
16, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(C 813)

## OH HOLY SPIRIT

THOU who makes me see everything and shows me the way to reach my ideal THOU who givs me the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me, I in this short dialogue want to thank Thee for everything and confirm once more that I never want to be separated from Thee no matter how great the material desire my be I want to be with Thee and my loved ones in your perpetual Glory Amen Persons must say this Prayer for 3 consecutive days without stating one's wish. After 3 days your wish is granted no matter how difficult it may be Promise to publish this Prayer.

(7840) P M

# தென்இலங்கையில் ஏன் இரவு ஊரடங்கு?

## சிறிமா கூறும் காரணம்

கொழும்பு, நவ. 29

தென்இலங்கையில் அரசினால் இரவுநேர ஊரடங்கு எதற்காக அமுல் நடத்தப்படுகிறது?

இதற்கான பதிலை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நிக்கரவெட்டியாவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் வெளியிட்டார்

அவர் சொன்னதாவது -

எனது படத்தைக் கொண்ட பிரசாரச் சுவரொட்டிகளை இரவு நேரத்தில் அகற்றுவதற்கு பிரதமர் பிரேமதாஸ அரச படையினரைப் பயன்படுத்துகிறார் பின்னர் பிரதமரின் தேர்தல் சுவரொட்டிகளை பாதுகாப்புப் படையினர் ஒட்டுகின்றனர், இதற்காகத்தான் இரவு நேர ஊரடங்குச் சட்டத்தை தென்இலங்கையில் அரசு அமுல் நடத்துகிறது.

தாம் சிகிரியா மலை போன்ற உறுதி படைத்தவர் என்று திரு. ஜெயவர்த்தனா அன்று தன்னை வர்ணித்துக் கொண்டார் இன்று அவர் தனது அரசாங்கத்தினால் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறார்.

ஜே வி. பியின் பெயரைப் பயன்படுத்தி எமக்குப் பயமுறுத்தல் கடிதங்களை அரசுப் பிரமுகர்கள் அனுப்புகின்றனர். இக்கடிதங்கள் எங்கே அச்சிடப்படுகின்றன என்பது எமக்குத் தெரியும்

மூழ்கிக்கொண்டு இருக்கும் யு.என்.பிக் கப்பலில் இருந்து எலிகள் வெளியேறுகின்றன.

நிசங்கா விஜயரத்ன முதலில்வெளியேறினார். பாரிஸில் இருந்து அவர் இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்தார். இப்போது மத்திய கிழக்கில் இருந்து பிரதி அமைச்சர் அபயரத்தின இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார்.

இன்னொரு முக்கிய பிரமுகர் ஆஸ்திரேலியாவுக்கு ஏழு கொள்கலன்களில் உடைமைகளை அனுப்பிவைத்துவிட்டார்.

இன்னும் பலர் வெளிநாடு போகத் தயாராகி வருகிறார்கள். எங்கு தான் அவர்கள் சென்றாலும் மக்களுக்கு பதில் கூற இலங்கைக்கு திரும்பி வந்துதான் ஆக வேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்

# FORTUNA ENTERPRISES

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள

**1. தைவான்**
தொழிற்சாலைத் தொழிலாளர் (Unskilled Factory Workers)
சம்பளம்:- ரூபா 12,000/-+ இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)

**2. குவைத்**
தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD - Rs 3300/- + இருப்பிட வசதி

**3. சிங்கப்பூர்**
SINGAPORE: Mould Makers
(அச்சு அமைப்பாளர்)
சம்பளம் S$ 1500/- - Rs 24000/- + இருப்பிடவசதி

**4. பாறெயின்**
எலக்ரிஸன் - Electrician (Wiremen)
சம்பளம் BD 120 Rs 9840/-
(Interview in Colombo on 3-12-88)

நாட வேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

(7828)

# Jaffna College Institute of Technology

VADDUKODDAI

ஜனவரியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

## Computer Programming AND Data Processing

SUBJECTS:
- (I) Programming (BASIC, COBOL, d BASE III+)
- (II) System Analysis
- (III) Data Processing
- (IV) Related Mathematics
- (V) English
- (VI) Accountancy.

Practicals on IBM PC'S, AT'S
Duration: ONE YEAR
சட்டணங்கள் தவணை அடிப்படையில்.
விண்ணப்பப் படிவங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
SELECTION AFTER INTERVIEW

— பணிப்பாளர்

(C 809)

# திருவுருவப்படத் திறப்புவிழா

மண்டைதீவு, நவ. 29

மண்டைதீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் எஸ். நடேசபிள்ளையின் திருவுருவப் பட திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பலர் அதிபர் நடேசபிள்ளையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

(ச 188)

# நாய்களுக்கு தடுப்பூசி

ஏழாலை சுகாதார பரிசோதகர் பிரிவில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு விசர் நாய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகிறது:

(உ- 29)

# உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவு

1989 ஜனவரி பிற்பகுதியில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான

## 1 மாத துரித பயிற்சி வகுப்புகள்

முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை:
திரு. T. N. பஞ்சாட்சரம் - திரு. K. சபாநாயகம் - திரு. S. மூர்த்தி

## 3ஆவது பிரிவு ஆரம்பம் 2-12-88

- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- கடந்தகால (82, 83, 84, 87) வினவிடைப் பயிற்சிகள்.
- விரிவுரைகள் - திங்கள், புதன், வெள்ளி
- கட்டணம் ரூபா 150-00 (முழுப்பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:-
தொடர்பு காலை 8 00 மணிமுதல் 12-00 மணிவரை

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**
1/1/10, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்) (C-810)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நிர்வாக எல்லையில் அமைந்துள்ள சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 01 - 01 - 1989 தொடக்கம் 31 - 12 - 1989 வரை குத்தகைக்கு எடுத்து நடாத்துவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 20 - 12 - 1988 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் இக்கேள்விகள் சம்பந்தமான கேள்விப்படிவங்களை கீழே விபரிக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரப் பணத்தையும் அவ்வவ் உப அலுவலகத்தில் செலுத்தி அவ் உப அலுவலக பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இக்கேள்விப்படிவங்களை 28 - 11 - 1988 முற்பகல் 9 மணி தொடக்கம் 18 - 12 - 1988 பிற்பகல் 3.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்படிவங்களை பெறுகின்ற போது சம்பந்தப்பட்டவர்கள் தமது பெயரையும் விலாசத்தையும் நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையைக் காண்பித்துக் கொள்வது அவசியம். அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விப்படிவங்களை குறிப்பிட்ட திகதியில் குறித்த நேரத்துக்கு முன்னர் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு மூலப்பிரதியை பதிவுக் கடிதங்கள் மூலம் 'விசேட ஆணையாளர் புதுக்குடியிருப்பு பிரதேச சபை புதுக்குடியிருப்பு' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது இதற்காக அக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட வேண்டும் அதே நேரத்தில் இணைப்பிரதியை அரக்கு முத்திரை இட்டு பிரா/உதவி உள்ளூராட்சி ஆணையாளர் முல்லைத்தீவு என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கேள்விகள் 20 - 12 - 1988 பிற்பகல் 2.30 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும் அச்சமயம் கேள்விக்காரர்கள் சமுகமளிப்பது விரும்பத்தக்கது.

அட்டவணை 1

| உப அலுவலகம் | விடயம் | ஆகக்குறைந்த கேள்வி | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| (1) புதுக்குடியிருப்பு | (1) புதுக்குடியிருப்புச் சந்தை | 20,000. 00 | 200. 00 | 500. 00 |
| | (2) மாட்டு இறைச்சிக்கடை இல I | 15,000. 00 | 200. 00 | 1000. 00 |
| | (3) ஆட்டு இறைச்சிக்கடை இல I | 3000. 00 | 100. 00 | 250. 00 |
| | (4) உடையார்கட்டு சந்தை | 600. 00 | 100. 00 | 250. 00 |
| | (5) புதுக்குடியிருப்புச் சந்தை கடை இல I | 600. 00 | 100. 00 | 250. 00 |
| | (6) புதுக்குடியிருப்பு சந்தை கடை இல II | 600. 00 | 100. 00 | 250. 00 |
| (2) ஒட்டுசுட்டான் | (1) ஒட்டுசுட்டான் சந்தை | 500. 00 | 100. 00 | 250. 00 |
| | (2) ஒட்டுசுட்டான் மாட்டு இறைச்சிக் கடை | 500. 00 | 200. 00 | 1000. 00 |
| (3) ஒலுமடு | (1) மாங்குளம் சந்தை | 10,000. 00 | 200 00 | 1500. 00 |
| | (2) மாங்குளம் மாட்டு இறைச்சிக் கடை | 5000. 00 | 200. 00 | 1500. 00 |
| | (3) மாங்குளம் ஆட்டு இறைச்சிக் கடை | 3000. 00 | 200. 00 | 1000 00 |

குறிப்பு:- புதிய இறைச்சிக் கடைகளை அசம்பாவித காரணங்களைக் கொண்டு வேறு இடங்களில் தமது செலவில் கடைகளை அமைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் எழுத்து மூலமான விண்ணப்பத்தை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டால் உத்தரவுப் பத்திரம் வழங்க ஆலோசிக்கப்படும்.

அ. இராசரத்தினம்
விசேட ஆணையாளர்

புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
புதுக்குடியிருப்பு.
15-11-88

(C-450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

# கேள்வி அறிவித்தல் - 1989

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின், அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கடைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம், 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட தனித்தனி கேள்விகள் 14 12 88 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் தலைமை அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால், கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் ஆகியன தலைமை அலுவலகத்தில் செலுத்தியதின் பேரில் 9 - 12 - 88 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல்வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 14-12-88 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மூலப்பிரதியை குறிப்பிட்ட பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் "விசேட ஆணையாளர் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை நகர மண்டபம், மானிப்பாய்" என விலாசமிடப்பட்டு போடுதல் வேண்டும். இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உ. ஆட்சி உதவி ஆணையாளர் பணிமனை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்" என விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் என்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதியிலும், நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் யாவும் 16 - 12 - 88 ஆம் திகதி காலை 10 00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்விக்காரர்கள் அல்லது பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். சமர்ப்பிக்கப்படும் எந்த ஒரு கேள்வியையோ அல்லது அதன் பகுதியையோ ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர், கேள்வி அறிவித்தல் நிபந்தனைகட்கு அமைய குத்தகை எடுத்து நடாத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவதொன்றை மீறுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்கள் அறியவிரும்பின், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

## முக்கிய குறிப்பு:

ஏற்கனவே யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் மேற்படி குத்தகைகளைப் பெற்று குத்தகைகளுக்கான முழுப்பணத்தையும் செலுத்தத் தவறிய கேள்விக்காரரின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
தலைமை அலுவலகம்,
நகர மண்டபம்.
மானிப்பாய்.
11-11-1988

**செல்வி சாந்தி சுப்பிரமணியம்**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்

## வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் பட்டினப் பிரதேசம்.

| குத்தகையின் தன்மை | கேள்விப்பத்திரப் பணம | கேள்வித் தோகையுடன் மேலதிகமாகச் செலுத்த வேண்டிய மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட தோகை |
|---|---|---|---|---|
| **மானிப்பாய்:** | | | | |
| இல: | | | | |
| 1. ஆட்டிறைச்சிக்கடை இல. 1 (சந்தை) | 50/- | 190/- | 300-/ | 25,000/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை இல. 1 (சந்தை) | 50/- | 190/- | 30[illegible]/- | 29,000/- |
| 3. பலசரக்குக்கடை (புளியடிச்சந்தை) | 50/- | 300/- | 350/- | 25,000/- |
| **பண்டத்தரிப்புப் பட்டினம்:** | | | | |
| 1. ஆட்டிறைச்சிக் கடை | 50/- | 50/- | 300/- | 2,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை | 50/- | 5[illegible]/- | 500/- | 45,000/- |
| 3. குப்பை வண்டில் மாடு வழங்குவதற்கு | 25/- | — | 25/- | 3[illegible]0/- |
| **பண்டத்தரிப்பு கிராமப் பிரதேசம்:** | | | | |
| 1. மாதகல் சந்தை | 50/- | | 200/- | 9,350/- |
| 2. விளான் சந்தை | 50/- | | 200/- | 2,750/- |
| 3. இளவாலைச்சந்தை | 50/- | | 200/- | 5,500/- |
| 4. மாசியப்பிட்டிச்சந்தை | 50/- | | 200/- | 5,665/ |
| 5. மாட்டிறைச்சிக்கடை (மாதகல்) | 50/- | 50/- | 300/- | 2,600/- |
| 6. மாட்டிறைச்சிக்கடை (இளவாலை) | 50/- | 50/- | 300/- | 4,875/ |
| 7. மாட்டிறைச்சிக்கடை (மாசியப்பிட்டி) | 50/- | 50/- | 300/- | 6,655/- |
| 8. அலுவலக வளவு குத்தகை | 50/- | | 100/- | 500/- |
| 9. கறகுளாவை வளவு குத்தகை | 50/- | | 25/ | 200/- |
| **மானிப்பாய் கிராமப் பிரதேசம்:** | | | | |
| 1. சாவல் கட்டுச்சந்தை ஆனைக்கோட்டை | 50/- | | 300/- | 5000/- |
| 2. பிரசாத்சந்தை நவாலி | 50/- | | 300/- | 8,500/- |
| 3. காக்கைதீவுச் சந்தை ஆனைக்கோட்டை | 50/- | | 300/- | 2,5[illegible]0/- |
| 4. மாட்டிறைச்சிக்கடை (பிரசாத் சந்தை) | 50/- | | 300/- | 5,250/- |
| 5. ஆட்டிறைச்சிக்கடை சாவல் கட்டு | 50/- | | 300/- | 4,500/- |
| 6. ஆட்டிறைச்சிக்கடை ஆனைக்கோட்டை | 50/- | | 300/- | 3000/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON EXAMS

## MAY - JUNE 1989

## C.I.M.A., I.D.P.M., I.A.B., A.A.T.

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

## ஆரம்பம்: 03 - 12 - 1988

தலைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே அமைந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்களைக் கொண்ட கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்

## HARVARD INSTITUTE

SUCCESSORS OF

## CANTABIA INSTITUTE

(SISTER ORGANISATION OF OXONIA, COLOMBO)

**No. 21, MAIN STREET, JAFFNA.**

(2ஆம் குறுக்குத் தெரு வழியாக வர வேண்டும்)

(C 802)


# ஐக்கிய நாணய சங்கங்கள்: புத்துயிர் அளிக்க முயற்சி

காங்கேசன்துறை, நவ. 29

ஐக்கிய நாணயசங்கங்களுக்கு புத்துயிர் அளிக்கவும் அவற்றைப் புனரமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

முன்பு கிராமங்கள் தோறும் ஐக்கிய நாணய சங்கங்கள் சிறப்பாக இயங்கி வந்ததுடன் அவற்றின் மூலமாக மக்களுக்கு கடன்வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

பின்னர் ஐக்கியநாணய சங்கங்கள் செயலிழந்து சேமிப்பு கடன் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன.

ஆனால் தற்போது இந்த ஐக்கிய நாணய சங்கங்களைப் புனரமைக்கவும் அவற்றுக்குப் புத்துயிர் அளிக்கவும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இ 68)

## புதிய சட்டத்தரணி

கொடிகாமம், நவ 29

கச்சாய் தெற்கு திரு இராசையா - சோதிநாதன் கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு பாரிந்த - ரணசிங்க முன்னிலையில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ச-15)


# உடனடி வேலைவாய்ப்பு

## சவூதி அரேபியா

## S. O. M. C

பல்கலைக்கழகம் } ஆஸ்பத்திரி } இவ்விரண்டிலும் வேலைவாய்ப்பிற்கு உடனடி ஆள் தேவை.

சம்பளம்

1. சுத்திகரிப்பாளர் (Cleaners) — 400 பேர் 400 SR
2. கனரக வாகனச் சாரதிகள் (Heavy Vehicle Drivers) — 15 பேர் 750 SR
3. சாதாரண வாகனச் சாரதிகள் (Light Vehicle Drivers) — 40 பேர் 600 SR
4. Heavy Equipment Operators (Cutterpiller, Buldozer Operators) — 16 பேர் 750 SR
5. மோட்டார் வாகனங்கள் பழுதபார்ப்பவர்கள் (Auto Machanic) — 10 பேர் 800 SR
6. மோட்டார் வாகன வயரிங் செய்பவர்கள் (Car Electrician) — 5 பேர் 800 SR
7. Leadman (Plumbing, Machanic Eleetric Wiring) — 10 பேர் 500 SR
   (கை பொருத்துனர், மெக்கானிக் மின்சார வயறில் இவைகளில் சொஞ்சம் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்)
8. Plumber (குழாய் பொருத்துனர்) — 10 பேர் 650 SR
9. Boiler Technician 1000 SR
10. Electrician — 10 பேர் 650 SR
11. சுத்திகரிப்பாளர் (பெண்கள்) Cleaners (Hospital) — 50 பேர் 400 SR
    வயதெல்லை பெண்களுக்கு 30—45 வரை
    ஆண்களுக்கு வயதெல்லை 21—48 வரை
    கடவுச்சீட்டு தந்து ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.
12. Labourers 100 USD
    (தொழிலாளர்கள்) லெபனன் நாட்டிற்குத் தேவை
    உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
13. வீட்டுப் பணிப்பெண் (House Maids) 100 USD

சகல நண்பர்கட்கும் அறியத்தருவது இவ்வருடத்தில் குறைந்தது 1000 பேருக்கு மேல் சவூதி அரேபியா, குவைத், ஓமான் போன்ற நாடுகளுக்கு அனுப்பிய ஒரேயொரு ஸ்தாபனம்

## T. V. TRAVELS

அன்றும் இன்றும் நம்பிக்கை நாணயத்துடன் பிரயாண ஒழுங்குகளைச் செய்து தருபவர்கள்

## T. V. TRAVELS

**Brown Road, Kokuvil**

இவ்வாண்டத்தில் கடைசியாக அரிய சந்தர்ப்பம் இந்தக் கம்பனி S. O. M. C. ஒன்று தான். ஒவ்வொரு மாதமும் தவறுது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் கம்பனி இதுவேதான்.

● முக்கிய குறிப்பு:-

## S. O. M. C.

இக்கம்பனியில் சகல தொழிலாளர்களும் இலங்கையர்கள். கடந்த எட்டு வருடமாக 5000 பேருக்கு மேல் தொழில் பார்க்கின்றார்கள். சகல துறைகளிலும் அதில் குறைந்தது மூவாயிரம் பேர் அளவில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த தமிழர்கள். கூடிய பாகம் இக்கம்பனியில் தமிழர்களுக்கு தனிமதிப்புண்டு என்பதை உங்களுக்கு விளங்கத் தருகின்றோம் மூன்று வருடம் தொடர்ந்து எதுவிதமான பிரச்சினையுமின்றி வேலை செய்தால் திரும்பவும் அக்கம்பனியில் இலங்கை வந்து திரும்பப் போவதற்கு அக்கம்பனி சகல ஒழுங்கும் செய்து தரும்.

# T V TRAVELS & TOURIST

**BROWN ROAD, KOKUVIL.**

(C/804)

# நியூ சாந்தி வெண் திரையில்

இப்பொழுது குதூகலமாக!
2 ஆவது ஜனத்திரள் வாரமாக!!!
காட்சியளிக்கிறது!!!
தினசரி 10 30 2. 30 மட்டும்
புதிய வெளியீடு
இளம் உள்ளங்களைக் கிளுகிளுக்கவைக்கும் ஒப்பற்ற காதல் காவியம்
இளையராஜாவின் இன்னிசையில்
பிரபு இளவரசி ரஞ்சனி
செந்தில் வினுச்சக்கரவர்த்தி
மற்றும்பலர் நடிக்கும்

## 'நாளெல்லாம்பௌர்ணமி'

—வண்ணப்படம்—

(C/ 807)

\+
J. M. J
உங்கள் பயண அமைப்பாளர்




## ✯ கனடா ✯ ஜேர்மனி ✯ பிரான்ஸ் ✯ சுவிஸ் ✯ இத்தாலி

ஷ நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம் இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதிவாரமும்

## கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

இது ஓர் அரிய சந்தர்ப்பம்
எனவே விபரங்களுக்கு
உடனடியாகத் தொடர்பு
கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கின்றேன்

● முக்கிய குறிப்பு!
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்

# S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C/806)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

# கம்பியூட்டர் கல்வி

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 5. 12. 88 பயிற்சிக்காலம்: 1 1/2 மாதம்
கட்டணம்: 950/- (இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)

## COMPUTER PROGRAMMING IN dBASE III

ஆரம்பம்: 6. 12. 88 பயிற்சிக்காலம்: 2 மாதம்
கட்டணம்: 1250/- (பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I B. M (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு நாள்: 3. 12. 88

# UNIKCO COMPUTER CENTRE

No: 5, POWER HOUSE Rd,
2 nd LANE, JAFFNA.
(Near Sub - Post Office)

(C/781)

# 'M' 3 TRAVEL

பெருமையுடன் வழங்கும்

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு. உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்.

## சவூதி

1. சமையற்காரர் - Cook - 5 இடங்கள்
   (மேற்கத்தைய, கீழைத்தேய சமையல்)
   சம்பளம் 7000/= Open Visa
2. பரிசாரகர் - Waiters - 4 இடங்கள்
   சம்பளம் 4000/= Open Visa
3. Taxi Driver - Open Visa
   வாகன சாரதி - 15 இடங்கள் - சம்பளம் 7000/=
4. எலக்ரிக்கல் இன்சினியர் - 1 இடம்
   Electrical Engineer - சம்பளம் - 15,000
5. Civil Engineer - 1 இடம்
   சிவில் இஞ்சினியர் - சம்பளம் - 15,000
6. Power House Electrician
   மின்சார நிலைய மின் இணைப்பாளர் - சம்பளம் 15,000
7. Cleaners - Open Visa

25 வயதுக்கு மேற்பட்டவர்கள்

1. தொழிலாளர் - Labourers - 6 இடம்
2. தொழில்நுட்ப மேற்பார்வையாளர் Technical Supervisors - 2இடம்
3. கைத்தொழில் மின் இணைப்பாளர் Industrial Electricians - 1 இடம்

நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# 'M' 3 TRAVEL

* புதிதாக கடவுச்சீட்டு செய்பவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சிட்டு எடுத்துக் கொடுக்கப்படும்,
** எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினுல் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.
*** பொண்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்.

இவை எல்லாவற்றிற்கும்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

# த. இந்திரநாதன்

சோதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

No. 1, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

C/787)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்

**பொருள்:**

வருந்தத்தக்க செயல்களை நண்பர் செய்தால் அதற்குக் காரணம் அறியாமை மட்டும் அன்றி மிகுந்த உரிமை என்றும் உணர வேண்டும்


# உதயன்

உண்மை - விஞ்ஞானம் - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
29-11-1988 த. பெ. இல 23


## மீண்டும் அதே நிலை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐந்து அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து பொது உடன்பாட்டின் கீழ் கூட்டு முன்னணி ஒன்றை நிறுவி உள்ளன.

இது தொடர்பான ஒப்பந்தம் கடந்த வியாழக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

''ஜனநாயக மக்கள் சக்தி'' (பிரஜாதந்திர ஜனத்தா பலவேகய) என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், லிபரல் கட்சி ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆகப் பெரிய கூட்டணியாக இது கருதப்படுகிறது.

ஏற்கனவே ஜனதா விமுக்தி பெரமுனை உட்பட எட்டுக் கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணைய இருந்தன. எனினும் கூட்டணியின் கொள்கைத் திட்டங்கள் தொடர்பாக ஒரு பொது உடன்பாட்டுக்கு வருவதற்கு மூன்று கட்சிகள் தவறி இருந்தன.

தற்போது பதவியில் இருந்துவரும் அரசாங்கத்தைத் தோற்கடிப்பதே இந்தக் கூட்டணியின் ஒரே நோக்கம் ஆகும்.

இலங்கையின் 40 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தொடர்ந்து நீண்டகாலம் பதவியில் உள்ள அரசாங்கம் தற்போதைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம்தான். அனேகமாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் ஆட்சிக்காலம் முடிவில் கவிழ்க்கப்பட்டு வந்தன.

இப்படியான ஒருநிலைமையைத் தவிர்ப்பதற்காக கடந்தகாலங்களில் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு யுக்திகளே எதிர்க்கட்சிகளை விழிப்படையச்செய்து ஒரு கூட்டணிக்கு வழிவகுத்துள்ளன.

ஆனால் இம்முறையும் சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளே தேர்தல் பிரசாரங்களில் முக்கியத்துவம் பெற்றிருப்பது கவலைக்குரியது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம், மாகாண சபைகள் ஆகியவற்றை இங்கு குறிப்பிடலாம். இவற்றைவைத்தே தற்போதைய தேர்தல் பிரசாரங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

இந்த ஐந்துகட்சிக் கூட்டணியின் தலைமைக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும், மாகாண சபைகளையும் எதிர்த்துவருகிறது

ஆனால் மாகாணசபைகளின் அதிகாரம் போதாது என்றோ, இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ்மக்களுக்கு உதவவில்லை என்றோ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இதுவரை எந்தக் கட்டத்திலும் கருத்துவெளியிடவில்லை.

இதிலிருந்து இக்கட்சியின் உள்நோக்கம் தமிழ்மக்களைப் பொறுத்தவரை என்னவாக இருக்குமென்பது புலனாகிறது.

இனவாதத்தினால் நாடு குட்டிச்சுவரான நிலையிலும் குறுகிய இனவாத அரசியல் தொடர்வது கவலைக்குரியது.

கடந்த நாற்பது ஆண்டுகாலமாக மாறி மாறிப் பதவிக்குவந்த சிங்கள பேரினவாதக் கட்சிகளால் தமிழ்மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டேவந்துள்ளனர். இதன் விளைவுகளால் ஏற்பட்ட தாக்கங்களை அரசாங்கம் தற்போது அனுபவித்துவருகிறது.

இந்த நிலையிலும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மீண்டும் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பயன்படுத்துவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றது ஆகும்.

## இலவச பாடநூல்கள் விநியோகம் ஆரம்பம்

சுன்னாகம் நவ 29

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் அடுத்த வருடப் பாவனைக்குரிய இலவச பாடநூல்கள் வந்து சேர்ந்துள்ளன. இந்தப் பாடநூல்கள் இவ்வருடம் மூன்றுந்தவணை முடிவடைவதற்கு முன் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பாடநூல்கள் யாவும்கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் காரியாலயங்களுக்குஅனுப்பப்பட்டுள்ளன. அவை அதிபர்கள் மூலமாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-27)

### சோவியத் யூனியனில் ஓர் 'அக்னிப் பரீட்சை'

# சின்னஞ்சிறு எஸ்தோனிய மாநிலக் குடியரசு கிரெம்ளினுக்கு எதிராக சுதந்திர பிரகடனம்!

## ஏற்றுக்கொள்ள முடியாது என கோர்ப்பச்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, நவ. 28

சோவியத்யூனியனில் உள்ள சின்னஞ்சிறிய எஸ்தோனியன் மாநிலக் குடியரசு கிரெம்ளினுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கிறது.

பால்டிக் பிராந்தியத்தில் உள்ள எஸ்தோனியன் குடியரசு தன்னை 'இறைமை' மிக்க நாடாகப் பிரகடனப்படுத்தியிருப்பதுடன்,

சோவியத் யூனியன் அரசின் சட்டங்களை (வீட்டோ)இரத்துச்செய்யும் அதிகாரங்களையும் கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறது.

எஸ்தோனியன் நாடாளுமன்றத்தில் இது சம்பந்தமான பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

இந்த 'இறைமைப் பிரகடன'த்துக்கு ஆதரவாக 250 உறுப்பினர்களும் எதிராக ஒருவரும் வாக்களித்தனர்.

இதற்கு முதல், எஸ்தோனியன் அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்யும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

அதற்கு ஆதரவாக 254 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் கிடைத்தன.

இப்பிரகடனம் செய்யப்பட்ட 24 மணித்தியாலங்களுள், எஸ்தோனியமாநில அரசுப் பிரதிநிதிகளைப் பேச்சுக்கள் நடத்த வரும்படி கிரெம்ளின் தலைவர்கள் அவசரமாக அழைத்தனர்.

அதற்கு முன்னர் கிரெம்ளின் அரசியல் குழு உறுப்பினர் விக்டர் செப்ரிக்கோவ் எஸ்தோனியா சென்று மாநிலத்தின் உரிமைகளை மத்திய அரசு பறிக்காது என்று உறுதி அளித்தார்

கிரெம்ளின் அழைப்பின்பேரில் எஸ்தோனிய மாநில அரசுப் பிரதிநிதிகள் கடந்த ஞாயிறு சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

'இறைமைப் பிரகடனத்தை' ஏற்கவே முடியாது என்று எஸ்தோனியப் பிரதிநிதிகளிடம் அதிபர் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

அப்பிரகடனம் செல்லுபடியாகாது என்றும் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

பேச்சுக்களின் முடிவில் எஸ்தோனியக் குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கருத்து வெளியிட்டார்

அப்போது அவர் சொன்னதாவது;

எஸ்தோனிய மாநிலத்தை 'இறைமையுள்ள நாடாக'மாற்றும் போராட்டத்தை நாம் கைவிடப்போவது இல்லை; தொடர்ந்து அதற்காகப் போராடுவோம்.

எஸ்தோனியக் குடியரசின் சீர்திருத்தங்கள் தொடர்ந்து இடம் பெறும். மாநிலத்துக்கு என்று புதிய அரசமைப்பை உருவாக்க குழு ஒன்று நியமிக்கப்படும்

சோவியத் யூனியனின் அரசமைப்புப்படி ஒவ்வொரு மாநிலக் குடியரசுக்கும் பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமை உண்டு. கிரெம்ளின் தலைவர்களின் தலையீடு அதை மீறுவதாக உள்ளது.

இப்படி எஸ்தோனிய மாநிலக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொன்னார். (எ)

வெளி உலகில்

## இஸ்ரவேல் அதிகாரி மாஸ்கோவில் பேச்சு

மாஸ்கோ, நவ. 28

இஸ்ரவேலிய வெளியுறவுப் பிரிவுச் செயலதிபர் ஆபிரகாம் தாமிர் மாஸ்கோவில் பேச்சுக்கள் நடத்தி வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

1967ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையேயான ராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்ட பின்னர், இஸ்ரவேலில் இருந்து உயர் அதிகாரி ஒருவர் மாஸ்கோ சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது

சோவியத்தின் உயர் பீடத் தலைவர்களை இஸ்ரவேலிய அதிகாரி இன்னும் சந்திக்கவில்லை என்று இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## 15கோடி டாலர் நிதி உதவி

ஐநா, நவ 28

ஐநா அகதிகள் நிவாரண நிதிக்கு 1989 இல் 15 கோடி டாலர் பணத்தை வழங்க 47 நாடுகள் உறுதியளித்துள்ளன.

அமெரிக்கா மட்டும் 8 கோடி 40 லட்சம் டாலர் பணத்தைக் கொடுக்க முன்வந்திருக்கிறது

1988 இல் 12 கோடி டாலர் பணமே ஐநா அகதிகள் நிவாரண நிதிக்கு கிடைத்தது. (எ)

## அரபாத்துக்கு விஸா மறுத்த செயல் விருந்தாளி நாடு செய்யக் கூடாதது

### அமெரிக்க அரசுக்கு ஐ.நா. செயலர் கண்டனம்

ஐ நா, நவ. 28

ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுவதற்கு நியூயார்க் வருவதற்கு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கு விஸா வழங்க மறுத்த அமெரிக்க அரசின் நடவடிக்கையை ஐ நா செயலாளர்நாயகம் பெரெஸ் டி குயிலர் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது;

மத்திய கிழக்குப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐ நா ஆற்றும் பணியைக் குழப்புவதாக அமெரிக்க அரசின் உத்தரவு அமைந்துள்ளது.

மத்திய கிழக்குப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய வாய்ப்புக்களை பலஸ்தீன விடுதலை இயக்கம் தந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அதன் தலைவர் யாசிர் அரபாத்தின் விஜயத்துக்கு அமெரிக்கா தடை விதித்து இருப்பது துரதிஷ்டவசமானதாகும்.

ஐ நாவின் விருந்தாளி நாடாக இருந்து கொண்டு அமெரிக்கா இப்படிச் செய்யலாமா?

இப்படி செயலாளர் நாயகம் கேட்டிருக்கிறார்.

இதனிடையில், அரபாத்துக்கு விஸா மறுக்கும் உத்தரவை மறுபரிசிலனை செய்யும்படி பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் அமெரிக்காவைக் கேட்டுள்ளன. பலஸ்தீனம் பற்றிய ஐ நா விவாதத்தை ஜெனிவாவில் நடத்தும்படி எகிப்தும் ஜோர்தானும் பொதுச்செயலாளரைக் கேட்டுள்ளன.

இதேவேளை, ஈராக் மற்றும் எகிப்து நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நியூயார்க் பயணத்தை ரத்துச்செய்து விட்டனர். (எ)

## முற்றுப்புள்ளி

நியூயோர்க் நவ 28

கடலில் கைத்தொழில் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதைத் தடை செய்யும் சட்டத்தில் அமெரிக்க அதிபர்றேகன் கையெழுத்திட்டார்.

இச்சட்டம் 31-12-1991 இல் இருந்து கழிவுப் பொருட்களை கடலில் கொட்டும் வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும். (எ)

# வாழ்வு என்பது வலுவிழந்து மதிப்பீடுகள் இழந்து நிற்கிறது

### யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அதிபர் உரை

யாழ்ப்பாணம், 29

''கடந்த சில ஆண்டுகளாக வாழ்வு என்பது வலுவிழந்து மதிப்பீடுகள் இழந்து நிற்கின்றது. நேர்மை உண்மை தனித்துவ ஒழுக்கமும் பொறுப்புணர்ச்சியும் மனித உயிரையும் உரிமைகளையும் மதிக்குந் தன்மை எமது பாரம்பரியம் கலாசாரத்தோடு இணைந்த நல்லொழுக்கம் என்பன சிதைந்து உருக்குலைந்து போயின''

யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் மேற்படி கல்லூரியின் அதிபர் அருட்திரு ஜி. ஏ. பிரான்சிஸ் ஜோசவ் தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும் பொழுது மேற்கண்டவாறு கூறினார்.

விழாவிற்கு யாழ். மேற்றிராணியார் ஆண்டகை பி தியோகுப்பிள்ளை தலைமை வகித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு. இராஜன் கதிர்காமரும் அவரின் பாரியார் திருமதி மகில்மலர் கதிர்காமரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

வண. பிதா ஜோசவ் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்கால நிகழ்வுகள் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களை மிக மோசமாகப் பாதித்துள்ளன.

நடந்தேறிய அவர்த் தங்கள் உடல் ரீதியாக பொருளாதார ரீதியாக மட்டுமன்றி உளரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் அழிக்க முடியாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன.

சமுதாயத்தில் வாழும் அனைவராலும் இன்றைய சூழ்நிலை சீர்திருத்தி அமைக்கப்படாவிடின் இந்த ஆழமான வடுக்கள் ஆற நீண்டகாலமாகலாம்.

காலத்தின் தேவை வெறும் புனர்வாழ்வு மட்டுமல்ல.

எமது இளைஞர்களின் உள்ளங்களும் புதுப்பிக்கப்படவேண்டும்.

இப் புதுப்பித்தலில் அரசியல்வாதிகள் அதிகாரிகள், ஆசிரியர்கள், இளைஞர்தலைவர்கள், மத நிறுவனங்கள் மற்றும் இளைஞரை உருவாக்குவதில் தொடர்புடைய அனைவரும் ஈடுபடவேண்டும்.

கல்வி என்பது அரசியல்வாதிகளின் கைப்பொம்மையாக முடியாது.

கல்வி முறையில் ஏற்படும் மாற்றத்தின்சவால்களை நாம் ஏற்கவேண்டுமென்பதை எவரும் மறுக்கமுடியாது.

இப்படி அவர் கூறினார். (இ-ச)

## பாடசாலை வளர்ச்சிக்கு அதிபர் உழைப்பு, பெற்றோர் ஒத்துழைப்புத் தேவை

ஒரு பாடசாலையின் வளர்ச்சி அப்பாடசாலையின் அதிபரின் அயராத உழைப்பிலும் பெற்றோர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது.

அந்த வகையில் முறிகண்டி இந்து வித்தியாலயம் ஒரு சிறந்த அதிபரைப் பெற்றதால் துரிதமாக முன்னேற்றம் கண்டுள்ளது.

முறிகண்டி ஆலயதர்மகர்த்தாவும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினருமான திரு. செ. குணரத்தினம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடந்த விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது இப்படிக் கூறினார்.

[illegible] மேலும் கூறியதாவது: இந்தப் பாடசாலை 1984ஆம் ஆண்டு இரு ஆசிரியர்களுடன் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ள பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் நான்கு வருடங்களுக்குள்ளாக இப் பாடசாலையின் அதிபர் திரு. க. தங்கரத்தினம் இப் பாடசாலையின் கல்வித் தரத்தை உயர்த்தி ஒன்பதாம் ஆண்டு வரை வகுப்புக்களை ஆரம்பித்துள்ளார்.

வறிய பிள்ளைகளுக்கு வருவாயைத் தேடிக் கொடுக்க சில தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் இவர் முயன்று வருகிறார்.

இப்படி அவர் கூறினார். (ச-94)

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ. 29

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைநாளை30ஆம் திகதி புதன்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும்.

யாழ் சைவ பரிபாலன சபைத்தலைவர் திரு சிவ. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரம்மஸ்ரீ. சிவ.வை. நித்தியானந்த சர்மா ஆறுமுகநாவலர் நற்பணி பற்றி விரிவுரை ஆற்றுவார். (ச)

## இரண்டாவது வாக்கு சுதந்திரக் கட்சிக்கா?

### இலங்கை மக்கள் கட்சி கவலை

கொழும்பு, நவ29

ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது வாக்கை சுதந்திரக் கட்சிக்குப் போடும்படி வாக்காளர்களைக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டிருப்பது குறித்து இலங்கை மக்கள் கட்சி கவலை தெரிவித்திருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி தனது வேண்டுகோளில் மக்கள் கட்சி வேட்பாளர் ஒஸி அபயகுணசேகராவை ஆதரித்து முதலாவது வாக்கையும் சுதந்திரக்கட்சி வேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்து இரண்டாவது வாக்கையும் அளிக்கும்படி வாக்காளரைக் கேட்டுள்ளது தெரிந்ததே.

இதுகுறித்து இலங்கை மக்கள் கட்சிப் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

'எமது வேட்பாளர் அபயகுணசேகராவுக்கு முதலாவது வாக்கை அளிக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சி கேட்டிருப்பதற்கு நாம் நன்றி கூறுகின்றோம். இரண்டாவது வாக்கை சுதந்திரக்கட்சிக்கு அளிக்கும்படி கேட்டிருப்பதுதான் எமக்குக் கவலை அளிக்கிறது. திருமதி பண்டாரநாயக்காவின் வெற்றியை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்பார்க்கிறது.

சோஷலிச வேட்பாளருக்கு நேரடி ஆதரவும் முதலாளித்துவ வேட்பாளருக்கு மறைமுக ஆதரவும் வழங்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் இரட்டை வேடம் எமக்குப் புரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியுடனான உறவுகளை வளர்க்க இது உதவாது'— இப்படி அப்பிரமுகர் சொன்னார். (இ-எ)

## இந்தியப் பிரசைகளுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு இந்திய அரசு கோருகிறது

கொழும்பு, நவ. 29

இலங்கையில் தொழில் புரியும் இந்தியப் பிரசைகளுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கும் படி இந்திய அரசு இலங்கையைக் கேட்டிருக்கிறது

நாட்டில் இடம் பெற்றுவரும் வன்செயல்களில் இந்தியப் பிரசைகள் மூவர் முதன் முறையாக கடந்த புதன் மொனறாகலை மாவட்டத்தில் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே இந்திய அரசு இலங்கைக்கு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மொனறாகலைத் தாக்குதல் சம்பவம் குறித்து அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் அமுல் நடத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களில் பணிபுரியும் இந்தியர்களுக்கு இலங்கை அரசு தகுந்த பாதுகாப்பு வழங்கவேண்டும்.

தென்பகுதியில் செயல்படும் தீவிரவாதக் குழுக்களே மொனறாகலைக் கொலைகளுக்குப் பொறுப்பு.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜீ. சி. ஈ. பரீட்சை விவரங்கள்

கொழும்பு, நவ. 29

ஒத்திவைக்கப்பட்ட ஜீ சி ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் புதிய திகதிகள் வருமாறு;

பழைய பாடத்திட்டம்: பெப்ரவரி24 முதல் மார்ச் 4வரை.

புதிய பாடத்திட்டம்; பெப்ரவரி 25 முதல் மார்ச் 8வரை.

இத்தகவல்களை பரீட்சை ஆணையாளர் ஸ்டேர்லிங் பெரேரா வெளியிட்டார். (ஒ - எ)

### பாதுகாப்பு முகாம் மூடப்பட்டது

யாழ். ஓட்டுமடம், மானிப்பாய் வீதி, இந்திய அமைதி காக்கும் படையினரின் முகாம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முகாம் முன்பாக வீதியில் போடப் பட்டிருந்த தடைகளும் அகற்றப்பட்டு வாகனங்கள்நேராகச் செல்வதற்கு வீதிதிறந்து விடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✶ ஜோன்சன்
வெளியிணை இயந்திரங்கள்
உதிரிப்பாகங்களின்
வடபகுதி விநியோகஸ்தர்கள்
10. H.P விலை: 25,500/-
5.6 H.P விலை: 21,500/-
எம்மை நாடுங்கள்
சேன். அன்ரனீஸ்,
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



# உதயன்

29 · 11 · 1988 செவ்வாய்க்கிழமை



ஜோன்சன் ✶ JOHNSON
10 H P, 5. 6 H P
வெளியிணை இயந்திரங்களையும்
உதிரிப்பாகங்களையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்
10 H. P. விலை: 25,500/—
5 6 H. P. விலை: 21,500/—
வடபகுதி விநியோகஸ்தர்கள் சேன். அன்ரனீஸ்
63, யூதாததேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.


# நாட்டை காப்பாற்றுவதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை

## ஜே. ஆருக்கு சிறிமா பதில் கடிதம்

கொழும்பு, நவ. 29

துணிவுடனும் விவேகத்துடனும் செயற்பட்டு நாட்டைக் காப்பாற்ற உங்களுக்கு இன்னமும் காலம் கடந்து விடவில்லை.

இப்படி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிய பதிலில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார்.

திருமதி பண்டாரநாயகாவின் முன்னைய இரண்டு கடிதங்களுக்கு ஜனாதிபதி கடந்த சனிக்கிழமை பதில் அனுப்பியிருந்தார். அந்தப்பதிலுக்கு அனுப்பப்பட்ட பதிலில்தான் திருமதி பண்டாரநாயக்கா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து சுதந்திரமான தேர்தல் கண்காணிப்புக்குழு ஒன்றை நியமித்தல் ஆகிய கோரிக்கைகளில் முதலாவதை ஏற்றுக்கொண்டுவிட்டு பின்னர் மனம்மாறிவிட்டீர்கள்.

பிரதமரும் வேறு சில அமைச்சர்களும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை விரும்பவில்லை. பிரதமரின் உத்தரவைப் பின்பற்றவா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டீர்கள்?

இப்போது இரண்டாவது கோரிக்கையான 'தேர்தல் கண்காணிப்புக் குழு' நியமன யோசனையை நிராகரித்து விட்டீர்கள்.

இதில் இருந்து ஒன்று தெளிவாகிறது.

தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறமாட்டாது என்ற நம்பிக்கையை உங்களின் நிராகரிப்பு மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா பதிலில் தெரிவித்து இருக்கிறார். (ஒ-எ)

## 'கப்பூச்சியா' படத்துக்கு கொழும்பில் தடை உத்தரவு

கொழும்பு, நவ 29

'கப்பூச்சியா' என்ற ஆங்கிலத் திரைப்படத்துக்கு அரசு தடை விதித்துள்ளது.

கொழும்பில் இப்படம் திரையிடப்பட்டு ஐந்து தினங்கள் கழித்து தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தாய்நாடான கப்பூச்சியாவின் விடுதலைக்காக வியட்நாம் வீரர்களுடன் 12 வயதுச் சிறுவன் ஒருவன் போராடுவதை இப்படம் சித்திரிக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் விசேட உத்தரவின் பேரிலேயே படம் தடை செய்யப்பட்டது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாகவே இந்தப் படத்துக்குத் தடை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர்தான் படம் மீண்டும் திரையிடப்படலாம் என்று திரைப்படச் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## ஆனைப்பந்தி வீட்டில் திங்கள் அதிகாலை கொள்ளை

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் நாவலர் வீதி ஆனைப்பந்திச் சந்தியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் சுமார் 35 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது.

குறிப்பிட்ட வீட்டுக்கு திங்கள் அதிகாலை 2 மணி அளவில் வந்த கொள்ளையர்கள் சாரமும் சிலர் சீருடையும் அணிந்திருந்தனராம்.

அனைவரும் ஆயுதபாணிகளாகவே காணப்பட்டனர்.

அவர்கள் வீட்டின் கதவைக் காலால் உதைத்து வீட்டில் இருந்தவர்களைக் கதவைத் திறக்குமாறு கூறினர்.

கிரனேட் எறிவோம் என்றும், வீட்டில் 'பெடியன்' இருக்கிறார்களோ என பார்க்கவேண்டும் என்றும் கூறினர்.

இதனை அடுத்து வீட்டுக்காரர் கதவைத் திறந்தபோது 6 பேர் திடீரென வீட்டினுள் புகுந்து அனைவரையும் ஆயுதமுனையில் குப்புறப் படுக்கச் செய்து 10 ஆயிரம் ரூபா பணம், மற்றும் நகை, றேடியோ, மணிக்கூடு என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர். (ஒ-9)

## அரச ஊழியருக்கு மாத முற்பகுதியில் சம்பளம்; சுற்றறிக்கை நேற்று வந்தது

யாழ்ப்பாணம், நவ 29

நாட்டிலுள்ள சகல அரச ஊழியருக்கும் டிசம்பர் மாத சம்பளத்தை அந்த மாத முற்பகுதியிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல. 188 இன் மூலம் இந்த விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்தது.

இந்தச் சுற்றறிக்கையில் டிசம்பர் மாத வேதனம் எதிர் வரும் 8 ஆம் திகதியே வழங்கப்படும் என்று ஒவ்வொரு மாத முற்பகுதியிலும் வழங்கப்படும் சம்பள முற்பணம் இந்தக் கொடுப்பனவு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ 9)

## சேருவில எம்.பியாக ஆரியபால

கொழும்பு, நவ 29

சேருவில தொகுதியின் புதிய எம்.பியாக திரு. ஆரியபால வல்பிட்டகம நியமிக்கப்பட்டார்.

ஐ.தே.க. செயற்குழு இந்த முடிவை கடந்த வெள்ளிக்கிழமை எடுத்தது.

40 வயதான இவர் முள்ளிப்பொத்தானை வாசி.

திருமலை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் 1981 இல் போட்டியிட்டார்.

சேருவில தொகுதியின் எம்.பியாக 1877 தேர்தலில் தெரிவுவுசெய்யப்பட்ட திரு எச் டி எல். லீலாரத்ன அண்மையில் பதவியை ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (ஒ எ)

## குடும்பஸ்தர் சூட்டுக்குப் பலி

கடலில் மீன் பிடிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் சூட்டிற்குப்பலியான சம்பவம் கடந்த வாரம் சாவகச்சேரி பகுதியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி உதய சூரியன் வீதியைச் சேர்ந்தவரான சே. பாக்கியராசா [வயது 25] என்னும் இரு குழந்தைகளின் தந்தையே மரணமானவர்.

இதேவேளை ஞாயிறு அன்று அதிகாலையில்ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தரான இருபாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ ரி-72)

## தாதிகள், மருத்துவமாது பயிற்சி டிசம்பர் மத்தியில்

யாழ்ப்பாணம், நவ 29

புதிதாகத் தெரிவான தாதிகள் பயிற்சி நெறிகள் அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பமாக உள்ளன.

தாதிகள் பதவிக்கு ஏற்கனவே 176 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 111 பேர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களையும் ஏனையவர்கள் வவுனியா மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களில் கணிசமானோர் சிங்களவர்கள்.

அத்துடன் மருத்துவ மாதுகளாக தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான விவரம் அடுத்த சில தினங்களில் வெளியிடப்படும்.

இதனை அடுத்து தெரிவானவர்களுக்கான பயிற்சி நெறிகள் டிசம்பர் மாத நடுப்பகுதியில் யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதேவேளையில் தெரிவானவர்களில் தாதிகளில் 60 பேருக்கும், மருத்துவ மாதுக்களில் 60 பேருக்கும் மாத்திரமே தற்பொழுது பயிற்சி மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும்—

எஞ்சியவர்கள் பயிற்சி வெற்றிடங்கள் கிடைக்கும் வரை அந்தந்த மாவட்ட வைத்தியசாலைகளில் கடமைக்கு அமர்த்தப்படுவர் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-9)

## ரூபா 9 கோடி நஷ்டம்

கொழும்பு, நவ 27

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளிலும் நாசகார சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட டிரான்ஸ்போமர்கள் அழிப்பினால் மின்சார சபைக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களில் டிரான்ஸ்போமர்கள், மின் கம்பிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களின் மதிப்பு 3 கோடி 50 லட்சம் ரூபா என்றும்—

மின் திணைக்களத்துக்கு இச் சேதங்களால் ஏற்பட்ட வருமான இழப்பு 5 கோடி 60 லட்சம் ரூபா என்றும் மின் சக்தி அமைச்சர் தயாரத்தின தெரிவித்தார். (ஒ-எ)

### யாழ் மின்சார....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பகுதி மின்சார அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு மேற்படி அட்டவணையின்படி மின்சார விநியோகத்தை மேற்கொள்ள உதவும்படி மின்சாரசபை அதிகாரி ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-5)

### தளங்கிளப்பு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமுல் செய்யப்பட்டது ஊரடங்கு உத்தரவை தொடர்ந்து தேடுதல்களும் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வாகனங்கள் தளங்கிளப்பு ஊடாக போக்குவரத்தில் ஈடுபட்டன.

இதேவேளையில் யாழ் நகரில் இருந்து சென்ற பஸ்கள் கைதடியுடன் திருப்பி அனுப்பப்பட்டன.

ஆனால் 11 மணியின் பின் நிலைமை வழமைக்குத் திரும்பியது (ஒ-9)

### முதலமைச்ச...

(1ம் பக்க தொடர்ச்சி)

மாள் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. அ. வரதராஜப்பெருமாள், ஈ. பி ஆர். எல். எப். இயக்கத் தலைவர் ஆவார்.

நிதி அமைச்சராக நியமனம் பெற்றுள்ள திரு. கிருபாகரன், ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் ஆவார்.

கொழும்பில் அரசு பிரகடனம் வெளியான பின்னர் அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது. (இ-எ)

### ஹபரணையில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

இதேவேளையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் சேதமாக்கப்பட்ட மின் கோபுரங்களைத்திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அச்சம்காரணமாக இலங்கை மின்சாரசபை ஊழியர் முன்வரவில்லையெனத் தெரியவருகிறது. (ஒ-5)

### பொறியியல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உபகுழு முழுமையாகப் பரிசிலனை செய்த பிறகு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்திருக்கிறது

இந்த அங்கீகாரம் விரைவில் கிடைக்குமெனவும் இதற்கான கட்டட நிர்மாண வேலைகளை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டிருப்பதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ ஐ)

### ● இப்படியும் உத்தேசம்

ஜனாதிபதித் தேர்தல் தினமான டிசம்பர் 19 ஆம் திகதிக்குமுன்பதாக பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள அவசரகால விதிகள் சிலவற்றை நீக்க அரசு உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்விஷயம் பற்றிப் பாதுகாப்பு வட்டாரங்களில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### பிரதி அமைச்சரின் சிறிய தந்தை சுட்டுக் கொலை

கொழும்பு, நவ. 29

இளைஞர் விவகார பிரதி அமைச்சர் காமினி அத்துக்கொறளையின் சிறியதந்தையான இ. சி. பி. அத்துக்கொறளை கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் அவரின் இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கி நபர்கள் பின்னர் அவரின் ஜீப்பில் தப்பிச் சென்றனர்.

பின்னர் ஜீப் கோணவல என்னுமிடத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ-எ)

### பாக் ஜனாதிபதி தேர்தல் டிச. 12இல்

இஸ்லாமாபாத், நவ. 29

பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதித்தேர்தல் வருகிற டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி நடைபெறுமென பிரதம தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

அதிபர் ஸியா - உல் - ஹக் விமான விபத்தில் மரணமான பின்னர் ஜனாப் குலாம் இஷாக் கான் பதில் ஜனாதிபதியானார்.

புதிய ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்

ஜனாதிபதித் தேர்தலில் பதில் ஜனாதிபதி குலாம் இஷாக் கான் போட்டியிடுவாரா என்பது தெரியவில்லை.

ஆனால் பிரதான அரசியல் கட்சிகள் ஜனாதிபதிப் பதவிக்குத் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தும் என்று தெரியவருகிறது (இ-எ)

### பாகிஸ்தான்....,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமரின் பெயரை அவர் வெளியிடுவார் என்று இஸ்லாமபாத்தில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை புதிய பிரதமர் பதவியேற்பார். (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## மு. தா. பொன்னம்பலம்

நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும், யாழ் பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் திரு. மு. தா. பொன்னம்பலம் அவர்கள் 27 11- 88 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் ஞானலட்சுமியின் அன்புக்கணவரும், சிவனேசன் (லூட்சன்ஸ்), திருமதி விஜயலட்சுமி இளலிங்கம் (சவூதி அரேபியா), ஸ்ரீஸ்கந்தராசா, சந்திரன் திருமதி கௌரி தேவராசா, கெங்காதரன் (U K), கெங்கேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தந்தையும், இளலிங்கம் (கணக்காளர், சவூதிஅரேபியா), திருமதி திலகவதி சிவனேசன், தேவராசா (பொறியியலாளர், லங்கா சீமெந்து லிமிடெட்), திருமதி சாந்த கௌரி ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி ரகுரஞ்சினி, சந்திரன் ஆகியோரது அன்பு மாமனும், காலஞ்சென்ற மு தா சுப்பிரமணியம், மு. தா. திருநாவுக்கரசு, திருமதி மனோன்மணி செல்லையா, காலஞ்சென்ற மு. தா. சோமசுந்தரம், மு. தா. தர்மலிங்கம், மு. தா நடராசா, திருமதி பராசக்தி சுகிர்தலிங்கம், மு தா துரையப்பா ஆகியோரது அன்புச் சகோதரனும் மயூரன், செந்தூரன், தனஞ்செயன், ஸ்ரீவாணி, பார்த்திபன், ஸ்ரீஜனனி ஆகியோரது அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28- 11- 88 திங்கட்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்று பிற்பகல் 4 00 மணிக்கு நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:-
பொ. சிவனேசன்
நீர்வேலி. (7844)

## திருமதி சரஸ்வதி இராசையா

திருமதி சரஸ்வதி இராசையா காலமாகிவிட்டார். அன்னார் தாமோதரம்பிள்ளை இராசையா அவர்களின் அன்பு மனைவியும், விஜயலட்சுமி. ஜெயலட்சுமி, ராசலட்சுமி, பராசக்தி, செல்வராசா (சோபிகா நகை மாளிகை உரிமையாளர்) ஆகியோரினது அன்புத் தாயாரும், இராஜரத்தினம், நாகராசா, மயில்வாகனம், இராசரத்தினம் (உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசரத்தினம், பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரேணுகா, கிருஷ்ணராஜா, அரவிந்தன், மயூரன், சோபிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10, அரசடி லேன், தட்டாதெரு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (29- 11- 88) காலை 11. 00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் டும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
இ. செல்வராசா
(7847)

## Mrs. A. A. Alvappillai

The Funeral of Mrs Alice Arullama Alvappillai Relict of G. M. Alvappillai (Head Master Puloly Methodist School) mother of Rajasingam (Retired Vice Principle, Jaffna College Jaffna Academy) Rasamalar, Inparanee (Hartley College) Inparanee (M G H S Point-Pedro) Arulanantham (Melbourne), Mother-in-law of Mahila, late J. M. Rajaratnam, late V. R. Selvarajah, Edward Ratnam (Saudi Arabia) Thevaranee (Melbourne).

Will take place on 29th November Tuesday at Point-Pedro at 9 00 a. m.

A. Rajasingam
College Road,
Point-Pedro (7845)

## J. சந்தியாப்பிள்ளை

அலுக்கை அளவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் J சந்தியாப்பிள்ளை (முன்னாள் அருணோதயாக் கல்லூரி அளவெட்டி) காலமானார். இவர் காலம் சென்ற அந்தோனியாராணியின் அன்புக் கணவரும். புனிதம், விமலா, ரட்ணராஜ், தேவராஜ், யோகராஜ் மலர், தங்கராஜ், கமலா, ஆனந்தராஜ் ஆகியோரின் தகப்பனும் ஆவார். நல்லடக்கம் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்:
S. I. S. மரியநாயகம்
(7987)

## மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

### திருமதி சரஸ்வதி சோதிப்பெருமாள்

தோற்றம்: 1933-11 27-மறைவு: 1988-11 14

திருமதி சரஸ்வதி சோதிப்பெருமாள் 1988-11-14 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1988-11-15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், மானிப்பாய் கல்விவட்டார அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய வட்டாரத்தில் இருந்து கலந்துகொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்களக் கல்வி அதிகாரிகள் ஆகியோருக்கும் மலர்வளையங்கள், மலர்மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்திய பாடசாலைகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். தனித்தனியாக நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

செ. சோதிப்பெருமாள், J.P.
(அதிபர், இணுவில் அ. மி த. க. பாடசாலை)
செல்வி மீனலோசனி சோதிப்பெருமாள்
செல்வன் இராஜன் சோதிப்பெருமாள்
(லண்டன்)
செல்வி சந்திரலோசனி சோதிப்பெருமாள்
(7984)

## பென்ஜமின் அல்பேட் அழகரத்தினம்

மானிப்பாய் முனைமலை ஒழுங்கையைச் சேர்ந்த பென்ஜமின் அல்பேட் அழகரத்தினம் 26.11.88ல் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சந்திரவதனி, திருமதி அற்புதவதனி, திருமதி கமலினி, திருமதி மாலினி, சரவணபவன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 27.11.88 இல் நடைபெற்றது.

தகவல்:
அ. சரவணபவன்.
(7986)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேட்] லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29- 11- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 29th November 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org